Registered as a Newspaper

PAPER CLASS
PHYSICS:
திரு. சத்தியசிலன்
CHEMISTRY:
திரு. மக்லி
செவ்வாய் வியாழன்
2.30 — 4.30
விவரங்களுக்கு:-
New Master Institute
BMC Lane, Jaffna.

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை


விலை ரூ. 1/-

PAPER CLASS
சனி, ஞாயிறு
காலை 8.30—12.30
Physics - திரு. வர்ணம்
Chemistry - திரு. தில்லை நாதன்
Botany - திரு. குகாதரன்
Zoology - திரு. நாகநாதன்
Pure / Applied ]-Maths
-திரு. நல்லையா
New Master Institute
BMC Lane, Jaffna.

ஏடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஆண்டு தை மீ 4 உ. வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஐ. அவ். பிறை 6 (17-01-1986) UTHAYAN -A LIVELY TAMIL DAILY கதிர்:-51

## நேற்று-- இரு முஸ்லிம்கள் உட்பட 3 பேர் மரணம்; 16 பேர் படுகாயம் கட்டடங்கள்; கடைகள் சேதம்

# யாழ்ப்பாண நகரத்தில் அதிகாலை குட்டியுத்தம்



நேற்றைய சம்பவத்தில் காயமடைந்தவர்களில் மூவர் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கையில் எடுக்கப்பட்ட படம். சரவணபவன் மனோகரன், கோபால் ராஜாராம், பண்டா (சிங்களவர்) ஆகியோர்.

### "மோட்டோ ஷெல்" குண்டுகளும் றொக்கெட் லோஞ்சர் குண்டுகளும் வந்து பாய்ந்து மக்களைக் கலக்கின

— அலுவலகச் செய்தியாளர்: வனிதராஜன் —

யாழ்ப்பாணம், ஜன.17

யாழ்ப்பாண நகரத்தில் நேற்று அதிகாலை குட்டி யுத்தம் ஒன்று நடந்தது. ஆயுதப் படையினரும், போராளிகளும் மோதிக் கொண்ட இந்த யுத்தத்தில் "மோட்டோ ஷெல்" குண்டுகள், றொக்கெட்லோஞ்சர் குண்டுகள் என்பன வந்து பாய்ந்து மக்களைக் கலக்கின.

அதன் விளைவாக இரு முஸ்லிம்கள் உட்பட மூவர் மரணமானார்கள். 16 பேருக்குப் படுகாயம் உண்டானது.

யாழ்ப்பாண நகரம் வழமைபோல் நேற்றுக் களை கட்டவில்லை. அனேகமாக வெறிச்சோடிக் கிடந்தது.

காலையில் வேலை இடங்களுக்கும் பாடசாலைகளுக்கும் வந்தவர்கள் திரும்பிச் சென்றனர். அதற்குப் பின்னரும் போக்குவரத்தும் மக்கள் நடமாட்டமும் மந்த நிலையில் இருக்கக் காணப்பட்டன. கடைகள் மூடப்பட்டிருந்தன.

குட்டி யுத்தம் பற்றி அறியப்படுவதாவது:

நேற்றுக் காலை சுமார் 5-30 மணி தொடக்கம் 7-30 மணி வரை இந்த மோதல் நடந்தது. கோட்டை முகாமில் இருந்து கவச வாகனங்கள் தொடர ஆயுதப் படையினர் கால் நடையாக காங்கேசன்துறை வீதி நோக்கி வந்தனர்.

முகாம் வாசலில் இருந்து குழை ஏற்றி வந்த மாட்டுவண்டில் ஒன்றுக்குப் பின்பாக கவச வாகனம் வந்ததாம்.

கோட்டை அகழியூடாக நடந்து வந்த ஆயுதப்படையினர் கவச வாகனத்தில் வந்தவர்களுடன் சேர்ந்துகொண்டனர்.

ஆயுதப் படையினரின் எண்ணிக்கை 150 வரை இருக்கும்.

#### குண்டு வெடிப்பு

காங்கேசன்துறை வீதியை நோக்கி ஆயுதப்படையினர் வருகையில் நகரில் குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்கத் தொடங்கின.

அதனைத் தொடர்ந்து ஆயுதப் படையினர் சுட ஆரம்பித்தனர்.

#### ஷெல் குண்டுகள்

அதனைப்பின்னர் போராளிகளும் ஆயுதப்படையினரை நோக்கித் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர்.

இதன் பின்னர் கோட்டைப் பக்கத்தில் இருந்து நான்கு பக்கங்களிலும் மோட்டாரால் இயக்கப்

(4-ஆம் பக்கம் பார்க்க)

### மரணமான மூவர்

யாழ்ப்பாணம், ஜன. 17

நேற்று யாழ்நகரில் இடம்பெற்ற அசம்பாவிதத்தில் மூன்று பேர்கள் மரணமானார்கள்.

அவர்கள் விவரம் வருமாறு;

1. அப்துல் காமில் அருஸ், வயது 34. தலையிலும் காலிலும் காயம் மூன்று பிள்ளைகளின் தந்தை.

2. அப்துல் ஹாமிட், வயது 30. மட்டக்களப்பு வாசி.

3. யோசப் பத்திநாதர். தொழிலாளி, வயது 34. செட்டிகுளம் வாசி. வண்ணார்பண்ணை முருகமூர்த்தி வீதியில் வசித்து வந்தார்.

### முச்சந்திமுரளி



பாதுகாப்பு வலயம் போட்டால் தங்கடை ஆக்களுக்கு நல்ல பாதுகாப்பு எண்டு அரசாங்கம் நினைச்சிட்டுது போலை.

தமிழ்ப் பொதுமக்களைப் பற்றி அவையளுக்கு என்ன கவலை....!

### காயமடைந்தோர் 16 பேரின் விவரம்

நல்லூர், ஜன.17

நேற்று யாழ்நகரில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தின்போது காயமடைந்த 16 பேரின் விவரம் வருமாறு:

1. சரவணபவன்மனோகரன். 20 வயது கொக்குவில் வாசி. பிராமண குடும்பத்தைச் சேர்ந்தவர். காலில் காயம் ஏற்பட்டுள்ளது.

2. வீரசிங்கம் 52வயது காவலாளி வேலை செய்து வருபவர். இவருக்கு முதுகில், கையில் காயம் ஏற்பட்டுள்ளது.

3. கோபால்ராஜாராம் 36வயது. 5பிள்ளைகளின் தந்தை சிவன்கோவிலடி வாசி. இவர் பெட்டிக் கடைக்குள் நின்றபோது குண்டு தாக்கியது.காலில் காயம் ஏற்பட்டுள்ளது.

4. நாகரத்தினம் அருட்சோதி 39வயது. மானிப்பாய் வீதியைச் சேர்ந்தவர். காலில் காயம் ஏற்பட்டுள்ளது. வைத்தீஸ்வராச் சந்தியில் பெட்டிக் கடைக்குள் நின்ற பொழுது சூடுவிழுந்தது. இவர் 3 குழந்தைகளின்

(4-ஆம் பக்கம் பார்க்க)

### குண்டு வீச்சு

கொழும்பு, ஜன. 17

மட்டக்களப்பு பிரதிப் பொலீஸ்மா அதிபர் (டி. ஐ. ஜி ) அலுவலகத்துக்கு கடந்த செவ்வாய்க்கிழமை கைக்குண்டு ஒன்று வீசப்பட்டது.

அலுவலகக் கட்டடத்துக்கு சிறிய சேதம் ஏற்பட்டது.

### நான்காவது நாளாக

# பருத்தித்துறை

### பதற்றத்தில்

யாழ்ப்பாணம், ஜன. 17

பருத்தித்துறையில் ஆயுதப் படையினரின் முகாமில் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதில் 3 பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

காயமடைந்தவர்களில் ஒருவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

அவரின் பெயர் வேலாயுதம் மோகன் (வயது 20) பருத்தித்துறை. கந்

(4-ஆம் பக்கம் பார்க்க)

### குடாநாட்டில்

# ராணுவ முகாமை சுற்றி பாதுகாப்பு வலயங்கள்

கொழும்பு, ஜன. 17

யாழ் குடாநாட்டில் உள்ள ராணுவ முகாம்களைச் சுற்றிப் பாதுகாப்பு வலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

முகாம்களில் இருந்து ஆயிரம் மீட்டர் சுற்றளவுடைய பிரதேசம் பாதுகாப்பு வலயங்களாக இருக்கும்.

கோட்டை ராணுவ முகாம் உட்பட எல்லா முகாம்களைச் சுற்றியும் இப்பாதுகாப்பு வலயங்கள் இருக்கும்.

எதிரிகளின் தாக்குதலை முறியடிக்க பீரங்கிகள் உட்படப் பெரிய ஆயுதங்களைப் பயன்படுத்தும் பூரண அதிகாரம் ஆயுதப் படையினருக்கு வழங்கப்பட்டுள்ளது.

முகாம்களைப் பாதுகாக்க இந்த ஆயுதங்கள் பயன்படுத்தப்படும்.

இப்படி அரசாங்கம் நேற்று வானொலி மூலம் அறிவித்தது.

பொது மக்கள் அவதானமாக நடந்து

(4-ஆம் பக்கம் பார்க்க)

### இரத்தம் தேவை

யாழ்ப்பாணம், ஜன. 17

யாழ். ஆஸ்பத்திரி இரத்த வங்கியில் இரத்தத்திற்கு தட்டுப்பாடு. ஆஸ்பத்திரி வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

பொதுமக்களை இரத்தம் வழங்கும்படி கோரப்பட்டிருக்கிறது.

### தமிழருக்குச் சுயாட்சி

# இந்தியாவின் கோரிக்கையை ஜே. ஆர். தட்டிக்கழிக்கிறார்!

### 'இந்து' தகவல்

சென்னை, ஜன.16

அதிகாரங்களைப் பரவலாக்கி தமிழ் மக்களுக்கு சுயாட்சி முறையான அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்ற இந்தியாவின் கோரிக்கையை ஜனாதிபதி திரு.ஜே.ஆர். ஜெயவர்த்தனா தட்டிக் கழித்து வருகிறார்.

இந்து பத்திரிகையின் பிரதம அரசியல் செய்தியாளர் திரு. ஜி கே. ரெட்டி எழுதியிருக்கும் தலைப்புச்செய்தியில் இந்த விபரம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் சட்டம், ஒழுங்கு, காணிக் குடியேற்றம், கல்வி போன்ற விடயங்களில் கூடிய அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என இந்தியா சுட்டிக் காட்டியிருக்கிறது.

வடக்கு. கிழக்கு மாகாணங்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கும் வகையில் அதிகாரப்பரவலாக்கலை ஏற்படுத்த வேண்டும் எனவும் ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனாவை இந்தியா தூண்டி வருகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யோசனைகளில் வடக்கு-கிழக்கு இணையும் அம்சத்தை அவர் முற்றாக எதிர்க்கிறார்.

ஆனால் கூட்டணியின்

(4-ஆம் பக்கம் பார்க்க)

### அரியாலையில் களேபரம்

யாழ்ப்பாணம், ஜன. 17

நேற்று நண்பகல் நாவற்குழி முகாமிலிருந்து பஸ்ஸில் வந்திறங்கிய சீருடையினர்களால் அரியாலையில் களேபரம் ஏற்பட்டது.

இ. போ. ச. பஸ்ஸில் அரியாலைச் சுடலைக்கு அருகில் திடீரென வந்திறங்கியவர்கள் அங்கு பல திக்குகளிலும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். பின்னர் வந்த வழியே திரும்பி விட்டார்கள்.

இதனால் அரியாலையில் நேற்று பதற்றம் நிலவியது.

### கோட்டைக்கு அருகே போனால்!

யாழ்ப்பாணம்,ஜன .17

யாழ்ப்பாணம் கோட்டை முகாமுக்கு அண்டிய பகுதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடுபவர்களுக்கு எந்தவித தண்டனையும் வழங்கலாம்.

பாதுகாப்பு படையினருக்கு மேலிடத்தால் அதற்கான அதிகாரம் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

### சுபநேரம்

17 - 01 - 86

வெள்ளிக்கிழமை

சுபநேரம்

6 35 முதல் 8.05 வரை

ராகுகாலம்

11 05 முதல் 12 35வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### அலுவலகங்கள் இடம் மாறும்

யாழ்ப்பாணம், ஜன 17


யாழ்ப்பாணம் பிரதம தபால் நிலையமும் வீரசிங்கம் மண்டபத்திலும் அதை அண்டிய பகுதியிலும் இருந்து இயங்கும் சகல அரசாங்க அலுவலகங்களும் வேறு இடங்களுக்கு மாற்றப்படலாம்.

பாதுகாப்பு அமைச்சு இது சம்பந்தமாக முடிவு செய்திருப்பதாக அதனுடன் நெருங்கிய வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

### படைவீரர் மூவர் அனுராதபுரத்துக்கு

யாழ்ப்பாணம், ஜன. 17

நேற்று நடைபெற்ற குட்டி யுத்தத்தில் காயமடைந்த மூன்று இராணுவ வீரர்கள் அவசர முதலுதவிச் சிகிச்சைகளை அடுத்து ஹெலிக்கொப்டர் மூலம் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டார்கள்.





நேற்று அதிகாலை யாழ்நகரில் நடைபெற்ற குட்டி யுத்தத்தின் போது வேட்டுகளுக்கும் குண்டுகளுக்கும் இலக்காகி உயிரிழந்த மூவரில் இரண்டு பேரின் சடலங்களை இங்கு காணலாம். காமில் அருஸின் சடலத்தை வலது பக்கத்திலும், யோசப் பத்திநாதரின் சடலத்தை இடது புறத்திலும் காணலாம்.

## இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்காரி சிலுக்குவின் 'சிருங்கார' பதில்கள்!

தமிழ்ப் படவுலகின் கனவுக் கன்னியான சில்க் ஸ்மிதா "சினிமா மெயில்" சஞ்சிகையின் வாசகர்களின் கேள்விகளுக்கு மிகச்சுவையாகப் பதிலளித்துள்ளார். பதில்கள் கிளுகிளுப்பாகவும் சிரிப்பாகவும், சுவையானவையாவும் அமைந்துள்ளன.

தினசரி சினிமா

அவற்றில் ரஸமான சிலவற்றை சினிமா வாசகர்களுக்காக இங்கு தொகுத்துத் தந்துள்ளோம். மிகுதி நாளை தொடர்ந்து வரும்.

கேள்வி: உனது செவ்விதழ்களில் ஊற்றெடுத்து ஆறுக ஓடும் தேன் நதியில் எனக்குக் கொஞ்சம் தருவாயா?

பதில்: ஒரு குடம் தண்ணீரை ஆயிரம் பேர் குடிக்கும் போது நீர் ஒருவர் குடித்தால் குறைந்தா போய் விடும்? குடிக்க வேண்டாம், குளித்துவிடும்!

கேள்வி: கமலுடன் நீங்கள் நடிக்கும்போது உங்கள் உணர்வு எப்படி இருக்கும்?

பதில்: உச்சி முதல் உள்ளங்கால் வரை உருக வைத்து விடுவார்!

கேள்வி: துக்ளக் ஆசிரியர் "சோ" பற்றித் தங்கள் கருத்து?

பதில்: உணர்ச்சிகளுக்கு அடிமையாகாத உருப்படியான பத்திரிகை ஆசிரியர்.

கேள்வி: ரஜனிகாந்த் சாமியாராகி விடுவார் என்கிறார்களே, உங்கள் கருத்து என்ன?

பதில்: சாமியார்கள் தான் சரசமாடுவதில் சகலகலா வல்லவர்கள் என்பது உமக்குத் தெரியாதா என்ன?

கேள்வி: சிலுக்கே! உன் இடையளவு என்ன?

பதில்: சந்திரசேகரர் பிடிக்கும் அளவுக்குச் சிறிய இடை தான்!

கேள்வி: சிவாஜிகணேசன் வந்தால் கூட கால்மேல் கால் போட்டுக் கொண்டு மரியாதை இல்லாமல் இருக்கிறீர்களாமே, நான் நம்பலாமா?

பதில்: நான் என்ன சிவாஜியின் கால் மேலா கால் போட்டேன்? என்கால் மீது என் காலைப் போட்டதில்என்ன தவறு?

கேள்வி: உங்களை அறியாமலே உணர்ச்சிவசப்பட்டு நடித்த காட்சி ஏதாவது உண்டா?

பதில்: "மூன்றும் பிறை" படத்தில் "பொன்மேனி உருகுதே" பாடல் காட்சியில், காதல் இளவரசன் என்னைக் கசக்கிய வேகத்தில் எனக்கு எல்லாமே உருகிவிட்டது!

கேள்வி: உன் முகத்தைப் பார்த்தால் அதைக் கடிக்க ஆசையாக இருக்கிறது?

பதில்: உமக்கு என் முகத்தை மட்டும் தான் கடிக்கஆசையா?

கேள்வி: ரஜனி, கமல் இருவரில் உன்னைக் கவர்ந்தவர் யார்?

பதில்: என்னைக் கவர்ந்தவர் கமல் தான். ரஜனி தான் சாமியாராகி விட்டாரே!

கேள்வி: தங்கள் உடம்பில் எந்த இடத்தில் கவர்ச்சி அதிகம் இருக்கிறது?

பதில்: மாம்பழத்தை எந்த இடத்தில் கடித்தாலும்இனிமைதான்!

அணிசேரா நாடுகளின்

# ஒருங்கிணைப்பு குழு டில்லியில் சந்திப்பு

### ஸிம்பாப்வே மாநாடு பற்றி ஆராய்வு

புதுடில்லி, ஜன. 16

ஐக்கிய நாடுகள் சபை தலைமையகத்தின் ஒருங்கிணைப்புக் குழு அணிசேரா நாடுகளின் மாநாடு பற்றிய ஆலோசனைகளை புதுடில்லியில் கூடி ஆலோசித்து வருகிறது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் ஸிம்பாப்வே தலைநகரில் நடைபெற விருக்கும் மாநாடு தொடர்பான ஆலோசனைத் திட்டங்களை இந்தக்குழு ஏற்றுக் கொண்டுளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சர்வதேச அரசியல் நிலை பற்றியும் 1983-ம் ஆண்டு மார்ச் மாதம் புதுடில்லியில் நடந்த 7 ஆவது அணிசேரா மாநாட்டின் தீர்மானங்களை அமுல் செய்வது பற்றியும் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

உலக பொருளாதார நிலைமை பற்றியும் புதிய உலகப் பொருளாதார அமைப்பு முறையொன்றை உருவாக்குவது பற்றியும் இங்கு ஆலோசிக்கப்படும்.

அணிசேரா நாடுகளும் மற்றும் வளரும் நாடுகளும் செய்துவரும் பொருளாதார முயற்சிகள் தொடர்பான விடயங்களும் மேலும் இங்கு பரிசீலனைக்கு எடுக்கப்படும் எனவும் நம்பப்படுகிறது.

### மீண்டும் சண்டை

லெபனானில் மீண்டும் சண்டை ஆரம்பித்துள்ளன,

சிரியாவின் உதவியுடன்முடிவுக்குக்கொண்டு வரப்பட்ட சிவில் யுத்த நிபந்தனைகள் மீறப்பட்டதைத் தொடர்ந்து, கிறிஸ்தவ படைப் பிரிவினர் சண்டையை மீண்டும் ஆரம்பித்துள்ளனர்.

### அமெரிக்க ஜெட் விமானத்தை காணோம்

வாஷிங்டன், ஜன. 16

அமெரிக்காவின் ஜெட் விமானம் ஒன்று காணாமற் போனது.

லிபியாவின் விமான எதிர்ப்புப் பீரங்கியினால் இவ்விமானம் சுடப்பட்டதைத் தொடர்ந்தே விமானம் காணாமற் போனது என்ற தகவலை அமெரிக்கா மறுத்துள்ளது.

பயிற்சிக்குச் சென்ற இடத்திலேதான் ஜெட் விமானம் காணாமற் போய்விட்டதாக அமெரிக்கா கூறியுள்ளது.

ஜப்பானில்

### ஆக்க இராஜதந்திரம் அறிமுகமாகும்

#### வெளிநாட்டமைச்சர் அறிவிப்பு

டோக்கியோ; ஜன. 16

ஜப்பானில் புதியதொரு ஆக்கரீதியான இராஜதந்திரம் அறிமுகப்படுத்தப்படும்.

இவ்வாறு ஜப்பான் வெளிநாட்டமைச்சர் ஷின்டாரோ அபே தெரிவித்துள்ளார்.

2000 பேருக்கு மேற்பட்ட அரச அதிகாரிகள் கூடியிருந்த கூட்டத்தில் ஷின்டாரோ உரையாற்றினார்.

அவர் அங்கு தொடர்ந்து கூறுகையில்;

இதுவரை ஜப்பான் அமைதி, தற்பாதுகாப்பு என்ற அடிப்படைகளைக் கொண்ட இராஜ தந்திரமுறைகளையே கடைப்பிடித்தது.

இனி தாக்குதல் அல்லது உலக சமாதான முன்னேற்றத்துக்கான தீவிரபங்கு என்ற அடிப்படையிலேயே எமது இராஜதந்திரம் பரிணமிக்கும்.

இது எமது ஆக்கரீதியான இராஜ தந்திரத்தின் அங்கமாகவே இருக்கும்.

உள்நாட்டு அலுவல்களுக்கும் இராஜதந்திரத்துக்கும் இடையில் இதற்குமுன் இப்படியானதொரு தொடர்பு இருந்திருக்க முடியாது.

ஜப்பான் மட்டுமே இப்படி இயங்கிப் பங்காற்றக்கூடிய ஆக்க இராஜந்ததிரம் இது என்றார்.

# வால் நட்சத்திரம் ஹேலிஸில் தண்ணீர்

### ஆய்வாளர் முடிபு

வாஷிங்டன், ஜன. 16

ஹேலிஸ்வால்நட்சத்திரத்தில் நீர் நிறைந்திருப்பதை வான்மண்டல ஆய்வாளர்குழுவொன்று கண்டுபிடித்துள்ளது.

வால் நட்சத்திரம் ரசாயனக்கலவையால் ஆனது என்ற பழைய கோட்பாட்டை இது உறுதி செய்வதாக 'நாசா' நிறுவனம் தெரிவித்துள்ளது.

கோடாட்நிலைய ஆய்வாளர்கள் பெரியதொரு தொலைநோக்காடியின் துணைகொண்டு ஹேலியை அவதானித்தனர்.

இராணுவ போக்குவரத்து விமானத்தையும் இதற்காகஅவர்கள் பயன்படுத்தினர்.

கோடாட் நிறுவன கோள்நிலைக் கல்வித் துறைத் தலைவர் பேராசிரியர் மைக்முமா இது பற்றிக் கருத்து வெளியிட்டபொழுது;

எங்களுக்கு இது உண்மையிலேயே பரபரப்பானதொரு காலமாகும்.

பத்து ஆண்டுகள் தொடர்ந்து மேற்கொண்ட பரீட்சார்த்த செயல்முறை ஆய்வுகளின் உச்சப் பலாபலன் இது என்றார்.

வால்நட்சத்திரங்களில் நீர்க்கலவை இருக்கிறது என்றும் இவற்றை 'பனிக்கட்டிப் பந்துகள்' என்றும் பண்டைய விஞ்ஞானிகள் கூறிவந்தனர்.

சந்தேகத்துக்குரியதாகக் கொள்ளப்பட்டுவந்த இந்தக் கூற்று இப்பொழுதுதான் முதன்முறையாக விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது.

## வெளி உலகில்

### எரி நட்சத்திரம் மூலம் செய்தித் தொடர்பு

புதுடில்லி, ஜன. 16

எரிநட்சத்திரத்தின் துணை கொண்டு இரண்டு இடங்களுக்கு இடையே தொடர்பு கொள்ளக் கூடிய எலக்ரோனிக் சாதனம் ஒன்றை இந்தியா அமைத்துள்ளது.

இந்தியப் பாதுகாப்பு எலக்ரோனிக்ஸ் விஞ்ஞானிகள் இச் சாதனத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.

பாதுகாப்பு விஞ்ஞானகூட டாக்டர் எஸ். ஸ்வரூப் இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்—

அணு யுத்தம் ஏற்பட்டு தொடர்பு சாதன வசதிகள் இயங்கா விட்டாலும், எரிநட்சத்திரங்கள் மூலம் மேற்கொள்ளப்படும் தொடர்பு இயங்கும்"— என்று கூறினர்.

### இவ்வளவு கடன்

ஜோஹன்னர்ஸ்பேர்க், ஜன. 16

தென் ஆபிரிக்கா 2 ஆயிரத்து 400 கோடி டாலர் வெளிநாட்டுக் கடன்களில் இருக்கிறது.

நாட்டில் வன்செயல்கள் இடம் பெறு தன் காரணமாக வெளிநாட்டுக்கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத நிலை தென் ஆபிரிக்காவுக்கு ஏற்பட்டுள்ளது.

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

### புளியங்குளம் சம்பவத்தில் காயமடைந்தவர் மரணம்

நல்லூர், ஜன. 17

கடந்த சனிக்கிழமை புளியங்குளத்தில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த கதிரவேலு முருகையா (79 வயது) பொங்கல் தினத்தன்று யாழ். ஆஸ்பத்திரியில் மரணமாகி விட்டார்.

இவரது மரணவிசாரணையை யாழ். பதில் நீதவான் திரு. க. கேசவன் நடத்தினர்.

காலஞ்சென்ற கதிரவேலு முருகையா இறப்பதற்கு முதல் 'உதயன்' செய்தியாளரிடம் பின்வருமாறு தெரிவித்தார்.

சனிக்கிழமை பிற்பகல் ஐந்து மணி அளவில் எனது வீட்டு முற்றத்தில் நின்றேன்.

அப்பொழுது வீதியால் ஆமி என்று சொல்லியபடி சிலர் ஓடினர்கள்.

சீருடையினர் நடந்தும் லொறியிலும் பஸ்ஸிலும் வந்துகொண்டிருந்தனர். வீதியின் இருபக்கமும் அவர்கள் சுட்டுக்கொண்டு வந்தனர்.

பயத்தினால் வீட்டினுள் புகுந்து கதவைப் பூட்டிவிட்டு வீட்டுக்குள் இருந்து விட்டேன்.

அப்போது எனது வீட்டைநோக்கி 50க்கும் மேற்பட்ட துவக்குச் சூடுகள் வந்தன.

சில சன்னங்கள் எனது வீட்டுச் சுவரைத் துளைத்திருந்தன. கதவைத் துளைத்துக்கொண்டு உள்ளுக்கு வந்த சன்னமே எனது தொடையையும் துளைத்தது.

நான கத்தியபடி வீட்டினுள் படுத்துவி டேன்.

இரத்தம் ஓடியது. தொடர்ந்தும் வெடிச் சத்தங்கள் கேட்டுக் கொண்டே இருந்தன.

வெடிச்சத்தம் ஓய்ந்த பின்பும் ஆஸ்பத்திரிக்கு வர முடியாத நிலையில் பயத்தால் வீட்டினுள் படுதது விட்டேன்.

பின்னர் அடுத்தநாள் காலை கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு அங்கிருந்து அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் கொண்டுவரப் பட்டேன்.

இப்படி அவர் கூறினர்.

றேடியோ, டெக் திருத்துபவர் தேவை

பல வருட அனுபவமுள்ள டெக், ரீ. வி. றேடியோ திருத்துபவர் தேவை. அவர் ஒரு பகுதியை முழுமையாகப் பொறுப்பேற்று நிர்வகிக்கக் கூடிய திறமை உடையவராக இருத்தல் வேண்டும். தகுந்த சம்பளம் வழங்கப்படும். தொடர்பு கொள்க வீனஸ் 266]1 ஸ்ரான்லி வீதி, (ஸ்ரீதர் தியேட்டர் அருகாமையில்) யாழ்ப்பாணம்.

மணமகள் தேவை

இங்கிலாந்தில் தொழில் பார்க்கும் 44 வயதுடைய ஒருவருக்கு 30க்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட மணமகள் தேவை. மணமகள்உடனடியாக இங்கிலாந்து செல்லத் தயாராக இருத்தல் வேண்டும். பிள்ளைகள் அற்ற விதவைகளும் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். தொடர்பு கொள்க. விளம்பர இல: 1, உதயன் மே.பா. 207 மின்சார நிலையவீதி, யாழ்ப்பாணம்.

மினி சினிமா

நவா மினி
(உஷாமினி முன்பாக)
248|5, K.K.S. Road,
JAFFNA,

Un Common Valuar (A)

ரொக்கட் லோஞ்சர்: கிறனேட் லோஞ்சர் போன்ற நவீன ஆயுதத் தாக்குதல் நிறைந்த படம்.

# கிளிநொச்சி முகாமால் பொதுமக்கள் பாதிப்பு

### கண்காணிப்புக் குழு கருத்து

கொழும்பு, ஜன. 17

கிளிநொச்சியில் இராணுவ முகாம், பொலீஸ் நிலையம் ஆகியவை மக்களின் நாளாந்த வாழ்க்கைக்கு பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய இடத்தில் அமைந்துள்ளன.

இப்படி யுக்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு கருத்து வெளியிட்டு உள்ளது.

கிளிநொச்சி பிரஜைகள் குழு, மக்கள் குழுப் பிரதிநிதிகள் இது சம்பந்தமாக முறையிட்டனர்.

ஆனால் இவற்றை அகற்றுவது குறித்து கருத்துத் தெரிவிப்பது கண்காணிப்புக் குழுவின் சக்திக்கு அப்பாற்பட்டு உள்ளது.

யாழ்ப்பாணம் பிரஜைகள் குழுக்களுக்கு தெரிவித்தது போன்ற அபிப்பிராயத்தைத்தான் இது விஷயத்திலும் குழு வெளியிடலாம்.

இப்படி கண்காணிப்புக் குழு கூறியுள்ளது.

### முகாமில் சமையல்காரர் மோதல்

மட்டக்களப்பு, ஜன. 17

மட்டக்களப்பு- கல்லடி ஆயுதப்படை முகாமில் வேலை பார்க்கும் இரண்டு சமையல்காரர்கள் மோதிக் கொண்டதில் ஒருவர் கத்திக்குத்துக் காயங்களுக்கு ஆளானர்.

நிமால் என்ற பெயர் உடைய இவர், மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

### காத்தான் குடியில் பதற்றம் தணிந்தது

மட்டக்களப்பு, ஜன. 17

காத்தான்குடி கூட்டுறவுச் சங்கக் கடைக் கொள்ளையைத் தொடர்ந்து மட்டக்களப்பில் நிலவிய பதற்றம் தணிந்தது.

மட்டக்களப்பு நகரில் ஆயுதப்படையினரின் ரோந்து அதிகரிக்கப்பட்டிருந்தது.

முஸ்லிம் வர்த்தகர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்காகவே ரோந்து அதிகரிக்கப்பட்டு இருந்தது.

யாழ் முகாம் தாக்கப்பட்டதாகக் கேள்விப்பட்டு

### மனைவியைக் கிளிநொச்சிக்கு அழைத்துச் செல்ல விரும்பிய கணவர் தற்கொலை

நல்லூர், ஜன. 17

யாழ். கோட்டை முகாம் தாக்கப்பட்டதாக அறிந்து தமது மனைவியைக் கிளிநொச்சிக்கு அழைத்துச் செல்ல விரும்பினர் ஒரு கணவர். மனைவி மறுக்கவே கணவர் விரக்தி அடைந்து தற்கொலை செய்து கொண்டார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடந்தது.

இராசதுரை ஜெகதீசன் (27 வயது) என்ற இளைஞனே தற்கொலை செய்துகொண்டவராவார்.

அவரது மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. க. கேசவன் நடத்தினர்

பொலீஸ் அதிகாரி எஸ். நல்லதம்பி சாட்சிகளை நெறிப்படுத்தினர்.

சம்பவம் பற்றி அவரது மனைவி கீதா சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது -

நானும் காலஞ்சென்றவரும் திருமணம் முடித்து ஏழு மாதங்கள் கூட முடியவில்லை.

எனது கணவர் கிளிநொச்சியில் ஸ்ரூடியோ வைத்திருந்தார்.

எனது தகப்பனரின் பிறந்த நாளுக்காக கடந்த 10ஆம் திகதி நானும் காலஞ்சென்றவரும் யாழ்ப்பாணம் வந்தோம்.

அடுத்த நாள் எனது கணவர் கிளிநொச்சிக்குத் திரும்பி சென்றுவிட்டார்.

மீண்டும் கடந்த புதன்கிழமை என்னை கிளிநொசசிக்கு அழைத்துச் செல்வதற்காக யாழ்ப்பாணம் வந்தார்.

யாழ்ப்பாணத்தில் பிரச்சினையாக இருப்பதால் என்னைத் தன்னுடன் வரும்படி அழைத்தார்.

நான் மறுக்கவே எனக்கும் அவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

அபபொழுது அவர் தன்னுடைய பொக்கற்றுக்குள் இருந்து ஒரு போத்தலை எடுத்து அதிலிருந்த ஒரு திரவத்தைக் குடித்தார்.

உடனே அவரை வைத்தியசாலைக்குக் கொண்டு வந்தோம். வைத்திய சாலை வெளி நோயாளர் பகுதியில் அவர் மரணமாகிவிட்டார்.

இவ்வாறு மனைவி தெரிவித்தார்.

விசாரணையின்போது காலஞ்சென்றவரினால் அவரது தகப்பனருக்கு எழுதப்பட்ட கடிதமும் அங்கு சமர்ப்பிக்கப்பட்டது.

கடிதம் வருமாறு:-

யாழ்ப்பாணத்தில் கோட்டை முகாம் தாக்கப்பட்டதாகத் தொலைக்காட்சியில் சொன்னார்கள். இதனால் மனைவியை இங்கு விட்டு என்னால் இருக்கமுடியாது அவரை அழைத்துவர யாழ்ப்பாணம் போகிறேன்.

மனைவி வர மறுத்தால் ஏதாவது செய்து கொள்வேன் என்னுடைய ஸ்ரூடியோவை விற்று கடன்களைக் கொடுங்கள்.

இப்படிக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.

### நாடு முன்னேற சக்திக்கு உரிய இடம்

#### சித்ரூபானந்தா அருளுரை

நாகர்கோவில் ஜன, 17

சக்திக்கு உரிய இடம் கொடுக்கப்படாமையினால் தான் இந்திய நாடு பின் தங்கியது. சக்திக்கு உரிய இடம் கொடுத்தால் மக்களும் நாடும் முன்னேற முடியும்.

இவ்வாறு சுவாமி சித்ரூபானந்தா கூறினர்.

தூய அன்னை சாரதா தேவியின் 133 ஆவது ஜன்ம தினம் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ணசாரதா சேவாச்சிரமத்தில் அண்மையில் நடைபெற்றது. அப்போது சுவாமி சித்ரூபானந்தா அருளுரை வழங்கினர்.

தனது அருளுரையில் அவர் மேலும் கூறியதாவது,

தூய அன்னை சாரதா தேவியின் வாழ்வு பவித்திரமானது. சக்தியின் ஆற்றல் இன்றி மக்களோ நாடுகளோ, ஏன் உலகமோ முன்னேறிய தில்லை அன்னையின் அவதாரம் சக்தியின் மகிமையை எடுத்து விளக்குகிறது.

சீதை, சாவித்திரி, விஷ்ணுப்பிரியா, ராதை போன்றவர்களிலும் பார்க்க தூய அன்னை சாரதாதேவி மிகவும் சக்திவாய்ந்தவர் என சுவாமி பிரேமானந்தா கூறியுள்ளார்.

அன்னை சாரதாவை நோக்கி எத்தனையோ ஆயிரம் அடியார்கள் சென்று பிரார்த்தனை செய்கிறார்கள். அவர்களில் ஒருவராக அன்னையை நோக்கி நிற்கும் நாம் இந்நாட்டிலுள்ள பாதிக்கப்பட்ட, துன்பப்பட்ட பின் தங்கிய ஏழை எளிய மக்களுக்கு சேவை செய்ய முன்வரவேண்டும். இப்பணியை நோக்கியே இச்சேவாச்சிரமம் தொண்டாற்றி வருகிறது.

இப்படி அவர் கூறினர்.

### மீனவர்களைக் காப்பாற்றுமாறு ஜனதிபதிக்கு தந்தி

யாழ்ப்பாணம், ஜன. 17

ஆயுதப்படையினரின் துன்புறுத்தலில் இருந்து அப்பாவி மீனவர்களைக் காப்பாற்றுங்கள்.

ஜனதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவுக்கு இப்படி வேண்டுகோள் விடுக்கப்படடுள்ளது.

யாழ் மாநகர முன்னாள் உதவி மேயர் திரு. எம். அலோசியஸ் ஜனதிபதிக்கு இது சம்பந்தமாக அவசரததந்தி ஒன்றை அனுப்பியுளளார்.

குருநகர் ஏழை மீனவர் கடலில் வைத்துத் தாக்கப்படுகின்றனர். அவர்களால் பிடிக்கப்படும்மீன் கொள்ளை இடப்படுகின்றது. அவர்களின் வள்ளங்கள் மீது சுடப்படுகின்றன.

உடனடியாகத் தலையிட்டு ஏழை மீனவரின் இன்னல்களைக் களையுங்கள் —

இப்படித் தந்தியில் கூறப்பட்டுள்ளது.

### அதிசய கன்று

நல்லூர், ஜன. 17

ஒரு பசுவுக்கு இரண்டு வாய்கள், மூன்றுகண்கள் இரண்டு மூக்குகள், மூன்று நாக்குகள் ஆகியவைகளுடன் ஒன்றரை முழம் நீளமான பசுக் கன்று ஒன்று பிறந்தது.

பொங்கல் தினத்தில் பிறந்த இக்கன்று சில மணி நேரத்தில் இறந்து விட்டது.

இராசாவின் தோட்டத்தைச் சேர்ந்த கந்தையா நாகரத்தினம் எஸ்பவரது பசுவே இக்கன்றை ஈன்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

விசுவாசிகளே! நீங்கள் பொறுமையைக் கடைப்பிடியுங்கள். ஒருவருக்கு ஒருவர் சகித்துக் கொள்ளுங்கள். (எதிரியை எதிர்க்க) எந்நேரமும் சித்தமாய் இருங்கள். அல்லாஹ்வுக்குப் பயந்து (நடந்து) கொள்ளுங்கள். நீங்கள் (இம்மையிலும் மறுமையிலும்) சித்தி அடைவீர்கள்.
-(அல்குர் ஆன் அத் 4 - வசனம் 200)

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24805, 22073
17-01-86 க. பெ. 23

# குடியுரிமைத் தீர்வு செப்படி வித்தையாகுமா?

இலங்கையின் நீண்ட காலப் பிரச்சினைகளில் மலையகத் தமிழரின் குடியுரிமை விவகாரமும் ஒன்று. அப்பிரச்சினைக்கு இறுதியும் நிரந்தரமுமான தீர்வுக்கு வழி காணப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இலங்கை அரசாங்கம் புதன்கிழமை விடுத்த அறிக்கை ஒன்றின் பிரகாரம் நான்கு லட்சத்து அறுபத்து ஒன்பதினாயிரம் பேருக்குக் குடியுரிமை வழங்கப்படும். அதற்கான சட்டவிதிகள் அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும். குடியுரிமை வழங்கும் வேலைகள் 18 மாதங்களில் பூர்த்தியாக்கப்படும்.

இந்த அறிவித்தல் எழுத்துக்கு எழுத்து சரியாக நடைமுறைப்படுத்தப்படின், அப்போது மட்டுமே அரசாங்கத்தைப் பாராட்ட இயலும். ஏனெனில் 1964 ஆம் ஆண்டில் செய்து கொள்ளப்பட்ட பிரதான ஒப்பந்தமான இலங்கை - இந்திய ஒப்பந்தமும் அதன் தொடராக 1974-ல் செய்யப்பட்ட ஒப்பந்தமும் அமுல் செய்யப்பட்ட விதம் திருப்தி அளிப்பதாக இருக்கவில்லை.

1964 - ல் செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை 3,75,000 மலையகத் தமிழருக்குக் குடியுரிமை வழங்க வேண்டும். இந்தியா 5,25,000 மலையகத் தமிழருக்குக் குடியுரிமை வழங்க வேண்டும். ஒப்புக்கொள்ளப்பட்ட எண்ணிக்கையினருக்கும் அவர்களின் வழித்தோன்றல்களுக்கும் பதினைந்து வருட காலத்தில் இருசாராரும் குடியுரிமை வழங்கிவிட வேண்டும். அதற்காக இந்தியாவும் இலங்கையும் 7:4 என்ற விகிதத்தில் குடியுரிமை வழங்கும் செயற்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும்.

ஆனால் 1983 ஆம் ஆண்டுவரை இந்தியா உரிய வேகத்தில் குடியுரிமை வழங்கியிருந்தும் இலங்கை அவ்வாறு செய்யாமல் சுணக்கம் காட்டியது. அதனால் இந்தியாவும் குடியுரிமை வழங்குவதைத் தாமதிக்க வேண்டியதாயிற்று.

இதனால் ஒப்புக்கொள்ளப்பட்ட எண்ணிக்கையில் இலங்கை 43,000 பேருக்கும், இந்தியா 84,000 பேருக்கும் குடியுரிமை வழங்காமல் ஒரு தவக்க நிலைமை தோன்றியது.

இந்தியாவைப் பொறுத்தவரையில் தற்போது எஞ்சிய 84,000 பேருக்கும் அவர்களின் வழித்தோன்றல்களுக்கும் குடியுரிமை வழங்க வேண்டியிருக்கிறது. எட்டு மாத காலத்தில் அதனைச் செய்து முடிப்பதாக இந்திய அரசு இணங்கி இருக்கிறது.

ஒப்பந்தத்தின் பிரகாரம் 43,000 பேருக்கும், அவர்களின் வழித்தோன்றல்களுக்கும், 1964 ஒப்பந்தத்தில் விடுபட்டு நாடற்றவர்கள் நிலையில் இருக்கும் 94,000 பேருக்கும் அவர்களின் வழித்தோன்றல்களுக்கும் குடியுரிமை வழங்க வேண்டிய நிலை இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது. இருவகைகளாலும் மொத்தம் 4,69,000 பேருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்க அரசாங்கம் இணக்கம் தெரிவித்திருக்கிறது. இது தான் உண்மையான புள்ளி விவரம்.

ஒப்பந்தத்தில் விடுபட்டு நாடற்றவர் நிலையிலிருக்கும் மலையகத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்க இலங்கை ஒப்புக்கொண்டது அதன் பெருமனது என்று சொல்லலாம்.

இந்த நாட்டின் வருமானத்தில் முக்கால் பகுதியை உழைத்துக் கொடுக்கும் மலையகத் தமிழர்களை நாடற்றவர் நிலையிலிருந்து நீக்க வேண்டும் என்று அரசு விரும்பியது அல்லது விரும்ப நிர்ப்பந்திக்கப்பட்டது அதிர்ஷ்டவசமானதாகும்.

ஆனால் சொன்னது செய்யப்படுமா என்ற சந்தேகம் ஆரம்பத்திலேயே எழுகின்றது. அரசாங்கம் விடுத்த அறிக்கையும் இந்த விஷயத்தில் அரசின் பிரதிநிதியாக விளங்கிய அமைச்சர் லலித் கூறிய விளக்கமும் இந்தச் சந்தேகத்தை எழுப்புகின்றன.

இலங்கை 4,69,000 பேருக்குப் புதிதாகக் குடியுரிமை வழங்க இருப்பது போலவே இந்தியாவும் 5,06,000 பேருக்கு புதிதாகக் குடியுரிமை வழங்கப்போகிறது என்ற தொனியில் புள்ளி விவரங்களுக்கு வியாக்கியானம் தரப்பட்டது.

இத்தனை லட்சம் பேருக்கும் குடியுரிமை வழங்குவதை எதிரணியினர் விட்டு வைப்பார்களா என்ற ஓர் அச்சநிலை அரசாங்கத்தினருக்கு இருப்பதாகத் தோன்றுகிறது. அதனால் தான் விஷயத்தை விளக்கமாகச் சொல்லாமல் சுற்றி வளைக்கிறார்களோ என்று நினைக்கத் தோன்றுகிறது.

எதுவாக இருந்தாலும், தாம் செய்து கொண்ட முடிவை நடைமுறைப்படுத்தும் துணிவு அரசாங்கத்துக்கு இருக்க வேண்டும். சொன்னதைச் செயலில் காட்டினால் தான் உண்மையான பலன் கிடைக்கும். இல்லையேல் வெறும் செப்படி வித்தையாக முடிந்து விடும்.

# தித்திக்கும் திருவாசகம் தந்த அருள்வேந்தர் மணிவாசகர்



## தேனாய் இன்னமுதாய் இனித்திடும் சிவப்பொருள் பாடிய சிந்தையர்

திருப்பெருந்துறையிலே குருந்தமர நிழலிலே ஒரு தவமுனி தம் சீடர்களுக்கு உபதேசம் செய்து கொண்டிருக்கிறார்.

கண்களிலே ஒளி, காதிலே குண்டலங்கள். கழுத்திலே உருத்திராட்சம். உடம்பு அடங்கலும் உத்தூளனம் தரித்து அக்கினையால் பிரகாசித்துக் கொண்டிருக்கின்றார்.

அவ்வழியாக ஓர் இளைஞன் செல்கிறான். அரச உடை, ஆபரணங்கள், ராஜ நடை, வாலிப மிடுக்கு, வதனத்தில் சதா புன்னகை, உபதேசம் செய்து கொண்டிருக்கும் தவமுனிவரைக் காண்கிறான். சிறிது நின்று நோக்குகிறான்.

எதற்காகத் தவமுனிவர் அவ்விடத்திற்கு வந்தாரோ, அதுவே இப்போது ஆரம்பமானது. இளைஞனுக்கு முனிவரிடம் கவர்ச்சி ஏற்படுகிறது. சிறிது சிறிதாக உலகப் பற்றுக்கள் நீங்குகின்றன. முன்னைவிடப் பன்மடங்கு கம்பீரத்துடனும், பொலிவுடனும் விளங்குகின்றான்.

ஒரு சூரிய அஸ்தமனம் ஒரு சூரிய உதயம். தவமுனிவரைக்காணவில்லை. இளைஞன் ஞான சூரியனாகப் பிரகாசிக்கின்றான். பாண்டி நாட்டின் முதல் அமைச்சனான தென்னவன் பிரமராயன் ஞானப்பிழம்பான திருவாதவூரராகக் காட்சி அளித்தார்.

நிலைபெற்ற சிவம் என்பது ஒப்பற்ற தனிப்பரம்பொருள் அதனைத் தேர்தலே ஞானம். தேர்ந்த அதனைத் தெளிதலே போதம். சிவஞான போதத்தினால் தெளிவுற்ற வாதவூரர் உலகை மறந்தார். இறை புகழ் பாடத் தொடங்கினார்

ஒருவனின் முன்னேற்றப்பாதையில் எவ்வளவோ சோதனைகள் நிறைந்துள்ளன. வாதவூரரும் அந்நிலைக்குஆளானார். அவற்றிற்கு ஏற்பட்ட சோதனைகளும், துன்பங்களும்அவரது சிவபக்தியினால் இரவியைக் கண்ட இருள்போல் ஓடி மறைந்தன.

வாதவூரர் இடையூறு எதுவுமின்றி இறைபுகழ் பாடி சைவமணம் கமழச் செய்தார். இவர் பாடிய ஒவ்வொரு பாடலும் ஓசை நயமும், பொருட் சுவையும் உள்ளதாய், கேட்போரை மெய் மறக்கச் செய்வதாய் இலங்குகின்றது.

இவரது வாசகங்கள் ஒவ்வொன்றும் தத்துவ முத்துக்கள். ஒருவனை அஞ்ஞான இருளிலிருந்து மெய்ஞ்ஞான ஒளிக்குஇட்டுச் செல்வன. மும்மலங்களான ஆணவம், கன்மம் மாயை என்பவற்றை நீக்குபவை.

தேன்போல் இனிமையானது திருவாசகம். படிப்போர் நாவில் தித்திப்பது. படிக்கப் படிக்கச் சலிக்காது. இப்பேர்ப்பட்ட ஒரு வாசகத்தை உலகுக்கு அளித்த வாதவூரர் சைவத்தைக் கட்டிக்காத்த "செம்மனச் செல்வர்" எனப் போற்றப்பட்டார்.

ஞானக்கதிர்

"சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி" அடியேனை மூடியுள்ள மாயத்திரையை, மலங்களை அறுத்தெறிந்து சிவமயமாக்கி ஆட்கொண்ட எம்பெருமானே உன் பாதம் பணிகின்றேன்.— என்றார் மாணிக்கவாசகர்.

"அவனருளாலே அவன்தாள் வணங்கி; உன்பாதம் பணியவும் உன் அருள்வேண்டி நிற்கின்றேன் பரம்பொருளே"

இப்படி பெரிய விஷயங்கள் நுணுக்கமாகவும் சுருக்கமும் தனது வாசகத்தின் மூலம் உலகுக்கு உணர்த்தினார். மணி மணியான வாசகத்தை உலகிற்கு அளித்ததால், மணிவாசகர் என அழைக்கப்பெற்றார் வாதவூரர்.

கரும்பு இனிக்கும். தேன் தித்திக்கும், பால் ருசிக்கும். கனி உவக்கும் ஆனால் இவை எல்லாம் சேர்ந்தால் எப்படி இருக்குமோ, அப்படி இருக்குமாம்வாசகரின் வாசகம். நாவிலே நீர் சுரக்கும் அளவிற்கு மிக அழகாக ஆழமாக வர்ணித்திருக்கிறார் இராமலிங்கம் சுவாமிகள்.

ஒன்றைப்பாடும்போது அதனுடன் தானும் ஒன்றி விடுகின்றார். திருவெம்பாவை பாடும் போது தானே கன்னிப் பெண்ணாகவும் அம்மானை பாடும்போது தானே குழந்தையாகவும் மாறி விடுகின்றார். இவரது வாசகங்கள் தனித்தன்மை வாய்ந்தன.

"நன்றே செய்வாய்
பிழை செய்வாய்
நானோ இதற்கு
நாயகமே"

நல்லதும் நீயே, கெட்டதும் நீயே, சகலமும் நீயே, எல்லாம் உனது செயல். நான் பொறுப்பாளி அல்ல. அறுபத்து மூன்று நாயன்மார் திருக்கூட்டத்தில் சேர்க்கப் படாதவர் மணிவாசகர். ஏனெனில், இறைவனிடம் நேரடியாக குரு சிஷ்ய முறையில் ஞானோபதேசம் பெற்றவர். இறைவனே நேரில்வந்து

(4 ம் பக்கம் பார்க்க)

# மக்களை ஒருமைப்படுத்திய மார்க்கம் இஸ்லாம்

நபித்துவம் பெறுவதற்கு முன்பே நாயகம் (ஸல்) அவர்களின் தொண்டு மக்களுக்குப் பெரும் அளவில் உதவியது.

அப்போதும் அவர்கள் ஒற்றுமைக்கும், இன ஒருமைப்பாட்டிற்கும் பெரிதும் தொண்டுபுரிந்தார்கள். தனது இருபத்தைந்தாவது வயதில், ஏழ்மையில் உழன்றபோது இவரது உண்மை வாழ்வைக் கண்டு திருமணம் செய்ய விருப்பிய பெரும் பணக்காரியாகத் திகழ்ந்த கதீஜாப் பிராட்டியாரை மணந்து ஏழ்மைக்கும், செழிமைக்கும் ஒருமைப்பாட்டைக் காட்டினார்.

வியாபார விஷயத்திலும், தொண்டுகள் புரிவதற்காகவும் வேலைகளைச் செய்துதவ கதீஜாப் பிராட்டியார் அவர்கள் ஸைத்பின் ஹாரித் என்பவரை, அடிமையாக நாயகம் (ஸல்) அவர்களுடன் அனுப்பிவைத்தார்கள்.

இதைக் கண்ட நாயகம் அவர்கள் "நான் அடிமை, எஜமான் என்ற வேறுபாடுபார்ப்பதில்லை. எனவே இன்று முதல் உன்னை உரிமைவிட்டு விடுகிறேன்" என்று அடிமையிடம் கூறினார்கள். ஆனால் அண்ணலாரின் அன்பு உள்ளம் அறிந்த அவ் அடிமை அவரைவிட்டுப் பிரிய விரும்பவில்லை. அவரது தந்தை, உறவினர்கள் அழைத்தும் அவ் அடிமை நபிகள்நாயகத்தை விட்டு அடிமைத் தனத்திலிருந்து வர விரும்பவில்லை. காரணம் கேட்டபோது அடிமையான தனக்கு எஜமானரான நாயகமவர்கள் தொண்டு செய்த

## ஒற்றுமை உணர்த்திய உத்தம நபிகள்

தாகவும் தாம் ஓர் அடிமையாக அவரிடம் இல்லையென்றும் கூறினாராம்.

பின்னர் அந்த அடிமைக்கு நாயகம் (ஸல்) அவர்கள் தனது சிறிய தாயாரின் மகளான ஸைனப் என்பவரை மணமுடித்து வைத்தார். இங்ஙனம் உயர்வுக்கும், தாழ்வுக்கும் பிணைப்பை ஏற்படுத்தி கலப்பு மணத்தை ஆதரித்தவர் பெருமானார் அவர்கள்.

உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வேறுபாடின்றியும், கறுப்பன், வெள்ளையன் என்ற நிற வேற்றுமையின்றியும் அனைவரிடமும் நாயமவர்கள் சமமான அன்பு காட்டினார்கள். பல மணம் புரிந்து, பல மனைவியருடன் வாழ்ந்த பெருமானார் அனைவரையும் சமமாக நடத்தினார்.

விதவை கதீஜாவிடமும், கன்னிமகள் ஆயிஷாவிடமும், அடிமைப் பெண் மரியாவிடமும் நாயகமவர்கள் காட்டிய அன்பு சமத்துவமுள்ளதாகும்.

பெண்களின் மனத்தை நன்கு புரிந்து வைத்திருந்த பெருமானார், அவர்களிடையே குரோத எண்ணம், பொறாமைக் குணம் தலைதூக்க இடம் அளித்ததே இல்லை. இவ்வாறு வீட்டைப் பராமரித்த அவர்களால் நாட்டையும், உலகையும் செம்மை வழியில்... அமைதி நிலையில் வழி நடத்திச் சென்றதில் எவ்வித மிகைப்பும் இல்லை.

நாயகமவர்கள் தங்களது சகாக்களுடன் அமர்ந்திருக்கையில் யாரும் தேடி அவரிடம் வந்தால் அடிமையாயினும் எவ்வித வேற்றுமையும் காட்டாமல் தனது அருகிலேயே அமர இடமளித்தார்கள். 'அதான்' என்னும் பாங்கொலியை விடுக்கும் பொறுப்பை ஒரு நீக்ரோ அடிமையான பிலால் (ரலி) அவர்களிடம் ஒப்படைத்திருந்தார்களென்றால் பெருமானார் அவர்கள் அடிமையையும், சுதந்திர மனிதனையும் ஒருமைப்பாட்டால்இணைத்த திறனை என்னவென்பது....?

ஒருமுறை அபிசீனிய மன்னன் நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அன்பளிப்பாக ஓர் அடிமைப் பெண்ணை அனுப்பிவைத்தான். நாயகம் அவர்களோ அப்பெண்ணை திருமணம் புரிந்து அடிமைத்தளையிலிருந்து விடுவித்தார். அப்பெண் மூலம் ஓர் ஆண்மகனையும்பெற்றெடுத்தார். தனக்கென்று எவ்வித உயர்கௌரவத்தையும் அவர் மக்களிடம் எதிர்பார்க்கவில்லை. தனக்சென்று எந்த கௌரவ மரியாதை அளிக்கவும் தன்னுடைய சகாக்களை அனுமதிக்கவில்லை.

அராபியர்களுக்கு, அரபியல்லாதவர்களிடமும்,




அராபியல்லாதவர்களுக்கு அரபிகளுடனும், கறுப்பனுக்கு வெள்ளையனிடனும், வெள்ளையனுக்கு கறுப்பனிடமும் எந்தவித சிறப்புமில்லை- இறையச்சத்தைக் கொண்டே ஒழிய என நாயகமவர்கள் திருவாய் மலர்ந்தருளினாரெனில் எந்த அளவு அவர் ஒருமைப்பாட்டிற்குப் பாடுபட்டார் என்பது புலனாகும்.

எவ்வாறான கூட்டங்கள் நடைபெற்றபோதும் நேரம் தாமதித்து வந்தாலும், நபி என்ற பெருமை கொண்டு தன்னுடைய கௌரவத்தைக் காட்ட விரும்பாமல் தானும் ஒரு பொது மகன் என்ற மனம் கொண்டு கூட்டத்துள் ஒருவராக ஒரு மூலையில் அமர்ந்து விஷயங்களைப் பார்வையிடுவார். எளிய வாழ்வே எண்ணியதைச் சாதிக்க வழிவகுக்கும் என்பதை அறிந்து தனது சாதனையை உலகில் நிலை பெறச் செய்தவர் நாயகமவர்கள். பட்டம்பதவியைக் கொண்டோ, பணச் செல்வாக்கைக் கொண்டோ, உயர்குடிப்

(4 ம் பக்கம் பார்க்க)

ஏ. ஷபாஅத் அஹ்மட்



### பொய்யாமொழி

குறள்:
மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

பொருள்:
இல்வாழ்க்கைக்கு ஏற்ற நற்பண்பு உடையவளாகித் தன் கணவனுடைய பொருள் வளத்துக்குத் தக்க வாழ்க்கை நடத்துகின்றவளே வாழ்க்கைத்துணை ஆவாள்.

## தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்.

# படுக்கையில் கிடந்துகொண்டே தமிழகத்தை வென்ற வீரர்

இன்று தமிழக முதலமைச்சர் எம். ஜி. ஆர் அவர்களின் 69 ஆவது பிறந்த தினம். அதையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

புனிதமான அரசியல் வாதியாக வாழ்ந்து புகழ் மலையிடையே துலங்கிடும் தமிழ்நாட்டு முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் 69வது பிறந்த தினம் இன்றாகும்.

கேரளத்தைச் சேர்ந்த நீதிபதி கோபாலனுக்கும் தாய் சத்தியபாமாவுக்கும் மைந்தனாக1917 ஆம் ஆண்டு தைமாதம் 17-ந் திகதி இலங்கையின் கண்டி மாநகரில் பிறந்தார்.

இளம்பராயத்திலேயே தந்தையை இழந்ததால் வறுமையால் வாட்டப்பட்ட இராமச்சந்திரன் தனது விடாமுயற்சியாலும் விவேகமான செயற்பாடுகளினாலும் இன்று மனிதருள் மாணிக்கமாகத் திகழ்கின்றார்.

வாடிய முகத்தோடு தன்னைநாடி வந்தோருக்கெல்லாம் வாரிவழங்கும் வள்ளண்மை மிக்கவர் எம். ஜி. ஆர்.

அவரது ஆட்சியில் ஆயிரக்கணக்கான எமது நாட்டு அகதிகளுக்குப் புகலிடமும் உணவும் அளிக்கப்படுகின்றது.

மக்களை வசீகரிக்கும் மகத்தான சக்தி நிறையப்பெற்றவர் இவர்.

'தம்பி எம். ஜி. ஆர். முகத்தைக் காட்டினாலே போதும் தமிழகத்தில் நாம் வெற்றிபெற' என்று அறிஞர் அண்ணா கூறுகின்ற அளவுக்கு மக்களைக் கவரும் கலைவந்த கலைஞராக எம். ஜி. ஆர் திகழுகின்றார்.

1967ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலின் போது கழுத்திலே குண்டடிபட்டு வைத்தியசாலையில் படுத்துக்கிடந்த வண்ணமே பறங்கிமலைத் தொகுதியில் வெற்றிக் கனியைச் சுவைத்த வீரர்.

1985இல் அதைவிட இன்னும் மோசமான [illegible] நாட்டு ஆஸ்பத்திரியில் [illegible] நாட்டில் நடைபெற்ற தேர்தலில் தன் கழகம் வெற்றிபெற்று ஆட்சிபீடமேற வழிவகுத்தார். நாவசைக்கவோ நட



மாடவோ முடியாதநிலையில் தலைவன் படுத்திருக்க — அத்தலைவனுக்காக மக்கள் வாக்களித்து — அத்தலைவனின்கையில் ஆட்சிப்பொறுப்பை ஒப்படைக்க மக்கள் முன்வந்த இந்த நிகழ்வு உலக சரித்திரமாகி விட்டது.

'எம். ஜி ஆர். என்றால் அண்ணா தி. மு க., அண்ணா தி. மு க. என்றால் எம். ஜி. ஆர்.' என்று சொல்லுகின்ற [illegible] தலைவனையும் [illegible] பட்டு வருகிறார்.

அறிஞர் அண்ணாவின் ஆத்மீகபலத்தைத் தன் மூலதனமாக்கி, மக்கள் தொடர்பையே தன் அரணாகக்கொண்டு, தமிழ் நாட்டின் சரித்திரத்தில் இல்லாதவாறு மூன்று பொதுத் தேர்தல்களில் தொடர்ச்சியாக வெற்றி வாகை சூடி ஆட்சிபீடமேறிய தலைவர் எம். ஜி. ஆர்.

ராஜாஜி, காமராஜர் போன்ற தலைவர்களே சாதிக்க முடியாதுபோன சாதனையாக மூன்று தடவைகள் தொடர்ந்து முதல்வரானார்.

நடிகனும் நாடாள்வான் என்று நானிலத்துக்கு நிரூபித்தவர்.

தி. மு. கவில் இருந்து வெளியேற்றப்பட்ட எம். ஜி. ஆர். தான் தாபித்த கட்சிக்கு அண்ணாவின் பெயரைச் சூட்டியதுமல்லாமல், தன் கட்சியின் கொடியிலும் அண்ணாவின் உருவத்தைப் பொறித்து பேரறிஞர் அண்ணாமீது தனக்கிருந்த விசுவாசத்தையும் பற்றையும் வெளிப்படுத்தினார்.

தமிழின்மீது மாறாத பற்றும் காதலும் கொண்ட இவர் உலகெலாம் வாழும் தமிழர்

(4ஆம் பக்கம் பார்க்க)

எஸ். கே. மகேந்திரன்
[சட்டத்தரணி; தலைவர், தமிழர் கலாசாரச் சங்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுத்திரா மல்ரி சேவிசஸ்
* மின்சார உபகரண சேவை
* வீடியோ புகைப்பட சேவை
* திருமண ஒழுங்குகள்
உங்கள் தேவை எதுவானாலும்
சமுத்திரா மல்ரி சேவிசஸ்
கிளை: முருகமூர்த்தி லேன்,
நெல்லியடி — கரவெட்டி.

உதயன்
17 - 01 - 1986

சமுத்திரா மல்ரி சேவிசஸ்
* திருமண சேவை
* காணி வாங்கி விற்கும் சேவை
* உள்ளூர் உற்பத்திச் சேவை
* கட்டட ஒப்பந்தச் சேவை
சமுத்திரா மல்ரி சேவிசஸ்
(கோண்டாவில் சந்தி)
303, பலாலி. வீதி கோண்டாவில்.

# யாழ். மாநகரசபை சொத்துக்களை பாதுகாருங்கள்

## வரியிறுப்பாளருக்கு ஆணையாளர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜன.17

யாழ். மாநகரசபைப் பொருள்கள் சொத்துக்களை பாதுகாக்க வரியிறுப்பாளர்களும் உதவ வேண்டும் என்று யாழ். மாநகர ஆணையாளர் திரு சி. வி. கே. சிவஞானம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

இது சம்பந்தமாக அவர் விடுத்த அறிக்கை வருமாறு:

10-1 1986 இல் மானிப்பாய் வீதியில், திருத்த வேலை காரணமாக கழற்றிப் போடப்பட்டிருந்த இரண்டு மின்கம்பங்கள் இனந் தெரியாதவர்களினால் டிரக்டர் மூலம் கடத்திச் செல்லப்பட்டிருப்பது கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

வரியிறுப்பாளர்களின் நிதியில் இருந்து யாழ். மாநகரசபை செயற்படுகிறது.

ஆகவே சபையின் பொருள்கள் வரியிறுப்பாளர்களின் உடைமையாகும்.

மாநகரசபை எல்லைக்குள்ளிருந்து சபைப் பொருள்களைக் கடத்திக் கொண்டு போவது நியாயப்படுத்தக்கூடிய செயல் அல்ல.

ஆகவே வரியிறுப்பாளர்கள் சபையின் பொருள்கள் கடத்தப்படும்போது தலையிட்டு நியாயங்களை எடுத்துச் சொல்லி சபையின் சொத்துக்களைப் பாதுகாத்து உதவுதல் வேண்டும் —

இப்படி ஆணையாளர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## பிரிகேடியருடனான சந்திப்பு நேற்று இல்லை

யாழ்ப்பாணம், ஜன .17

வட பகுதி இணைப்பு அதிகாரி பிரிகேடியர் எச். எஸ். ரூபசிங்கா நேற்று அரச அதிபர் மற்றும் சிவில் அதிகாரிகளைச் சந்திக்கவில்லை.

நேற்றுக் காலை யாழ் நகரில் நடந்த அசம்பாவிதங்களைத் தொடர்ந்து இச்சந்திப்புக்கள் ரத்துச் செய்யப்பட்டன.

## இந்தியாவின் கோரிக்கையை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யோசனைகளை ஏற்று மாவட்ட நிறைவேற்று அதிகாரிக்கு அதிக அதிகாரம் வழங்குவதற்கு இந்தியாவிடம் அவர் உறுதியளித்திருக்கிறார்.

எனினும் முக்கியமான பிரச்சினைகளை அவர் தட்டிக் கழித்து வருகிறார்.

கூட்டணியின் ஆலோசனைகளை அமுல்படுத்தாமல் போராளிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுப்பதில் அவர் கவனமெடுத்து வருகிறார். இது இந்தியாவை கவலையடையச் செய்திருக்கிறது.

கூட்டணியின் ஆலோசனைகள் நியாயமானது என இந்தியா கருதுகிறது.

எனவே இந்த ஆலோசனைகள் குறித்து இறுதியான - தீர்க்கமான முடிவை திரு ஜெயவர்த்தன அறிவிக்கும் வரை பண்டாரி இலங்கைக்கு அனுப்பப்படமாட்டார்.

புதுடில்லியில் வைத்து தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர்களையும் பந்தோபஸ்து அமைச்சர் லலித் அதுலத் முதலியையும் சந்திக்க வைக்க எடுத்த முயற்சிகள் நிறைவேற முடியவில்லை.

இப்படி திரு. ரெட்டி அந்தச் செய்தியில் தெரிவித்திருக்கிறார்.

## படுக்கையில்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

களையெல்லாம் நேசிக்கும் நெஞ்சம் கொண்டவர். இலங்கையில் தமிழர்படும் இன்னல்களை அவனிக்கெடுத்துக் காட்டுவதற்காக கடந்த ஆண்டு தமிழ்நாட்டில் நடத்தப்பட்ட பிரமாண்டமான உண்ணாவிரதப் போராட்டத்தின்போது, தன் வருத்தத்தையும் பாராட்டாது கலந்துகொண்டு உண்ணாவிரதம் அனுஷ்டித்து ஈழத்தமிழர்மீது தனக்கிருந்த பற்றையும் பாசத்தையும் பறைசாற்றினர்.

சத்துணவுத் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டுச் சிறுர்களுக்கு கல்வியும் இலவச உணவும் வழங்கும் இவரது செயற்திட்டங்கள் அவரது மனித நேயத்தைப் புலப்படுத்துகின்றன.

ஆளுமையும் வண்மையும் அன்னை தமிழின் மீது பற்றும் அயல்நாட்டுத்தமிழர்மீது பாசமும், கொண்ட எம். ஜி. ஆரின் அனைத்துச் சாணக்கியமும் இலங்கைத் தமிழர்களின் இன்னல்களைக் களையப் பயன்பட வேண்டும்.

காலங்கள் தீர்வின்றிப் போவதால் காலனின் கயிற்றுக்குத்தான் ஈழத்தில் வேலை கூடுமே தவிர வேறெதுவும் நடக்காது. இதை உணர்ந்து தீர்க்கமான முடிவொன்றை உருவாக்க எம். ஜி. ஆர். முன்வரவேண்டும்.

வரலாறு அத்தகைய தேவைப்பாடு ஒன்றை எம் ஜி ஆர், அவர்களுக்காக உருவாக்கி வைத்திருக்கிறது.

## மக்களை...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பிறப்பைக் கொண்டோ ஏழைகளிடம் தனது கருத்தை வெளியிட முடியாதுஎன்பதையுணர்ந்து எளிமை என்ற ஒரே செல்வாக்கைக் கொண்டு ஏழைகளின் தோழராக வாழ்ந்தார்கள்.

எனவேதான் அவர் தோற்றுவித்த இஸ்லாம் மார்க்கத்தில் நாடு; மொழி; நிறம்; குலம்; கோத்திரம்; வெட்பதட்பம்; கொள்கை கலாசாரம்; குடி; பிறப்பு முதலிய வேறுபாடெளின்றி அனைவரும் சமமான் என்ற நம்பிக்கையின்பால் கொண்ட ஒருமைப்பாட்டால் கட்டுண்டு ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசம் பாராமல் தோளோடு தோள் சேர்ந்து இறை வணக்கம் செய்வதை பள்ளிவாசல்களில் காண்கிறோம்.

Company executive requires a large house with telephone facilities and car garage, within one mile radius from Jaffna town.

CONTACT SHABRA Or
Telephone: 22073

வீடு தேவை

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் வேலை செய்யும் ஒருவருக்கு இரண்டு அறையுடன் கூடிய வீடு ஒன்று வாடகைக்குத் தேவை. குடும்பத்தில் நான்கு பேர். சிறு குழந்தைகள் இல்லை. 96, அம்பலவாணர் வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துடன் அல்லது 24398 என்ற தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும்.

## ராணுவமுகா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ள வேண்டும் என்றும் அந்த அறிவிப்பில் எச்சரிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு வலயங்கள் ஏற்படுத்தப்பட்டதால் பொதுமக்கள் அசௌகரியங்களை எதிர்நோக்க நேரிடலாம். அது குறித்து அரசாங்கம் கவலை கொள்கிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாவற்குழி மீனவர் தாக்கப்பட்டனர்

நல்லூர், ஜன 17

நாவற்குழிப்பாலத்தில் மீன் பிடித்துக் கொண்டு நின்ற இரண்டு மீனவர்கள் சிறுடையினரின் தாக்குதலுக்குள்ளாகினர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

### ரூபவாஹினி

17-01-1986

மாலை

5.00 – செய்திகள்
5.05 – பாடசாலை விஞ்ஞானம்
5 30 – ஸ்கூபி டூ ஷோ-கார்ட்டூன்
6.00 – பட்டர்பிளை ஐலண்ட்
6 30 – செய்திகள்-தமிழ்
6.55 – சாரங்கி - கலை நிகழ்ச்சி
7.25 – 'மங்கி' - சினநாவலில் இருந்து
8.00 – செய்திகள் - சிங்களம்
8 20 – 'மங்கி' - தொடர்ச்சி
8.45 – தேசியலொத்தர் சபை நிகழ்ச்சி
9 00 – செய்திகள் - ஆங்கிலம்
9 25 – டேற் லைன் - நடப்புவிவகாரம்
9.45 – ஆங்கிலப்படம்
11.30 – ஒளிபரப்பு முடிவு.

## தித்திக்கும்....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

"பாவை பாடியவாயால் ஒரு கோவை பாடுக" என்று இரந்தார் என்றால் மணிவாசகரின் பெருமையை, தெய்வீகத் தன்மையை அறிந்து கொள்ளுங்கள்.

நன்றி:
சைவச் சிறுவன்

## 5 இந்திய மீனவர் கற்பிட்டியில் கரை சேர்ந்தனர்

கொழும்பு, ஜன.17

மீன் பிடி வள்ளத்துடன் 5 இந்திய மீனவர்கள் புத்தளம் – கற்பிட்டிப் பகுதியில் கரை சேர்ந்தனர்.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

வள்ளமும் கடற்படையின் பொறுப்பில் உள்ளது.

## நான்காவது...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தவுடையார் வீதிவாசி.

பருத்தித்துறை காந்தி சிலைக்கு முன்னால் இவர் சுடப்பட்டார். வயிற்றிலும் இடதுசையிலும் காயங்கள் ஏற்பட்டன. மிகவும் ஆபத்தான கட்டத்தில் இவர் இருக்கிறார்.

காயமடைந்த மற்றும் இருவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தத் தாக்குதலில் தியேட்டர் ஒன்று பலத்த சேதமடைந்தது.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து பருத்தித்துறை நகரில் தொடர்ந்து நான்காவது நாளாக பதற்றம் நிலவியது,

## கோட்டைக்கு அருகில் உள்ள
## மக்கள் வங்கிக் கிளையில் ரயில் டிக்கெட்
### இன்று முதல் வாங்கலாம்

யாழ்ப்பாணம், ஜன.17

யாழ் ரயில் பயணிகள் பணம் கொடுத்துப்பயண டிக்கெட்டுக்களை கோட்டைக்கு அருகில் உள்ள மக்கள் வங்கிக்கிளை மேல் மாடியில் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று முதல் காலை 8.30 மணியில் இருந்து நண்பகல் 12 மணிவரை, இந்த அலுவலகத்தில் தினமும் பணம் செலுத்தி ரயில் பயண டிக்கெட்டுக்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று யாழ் ரயில் நிலைய அதிகாரி அறிவித்துள்ளார்.

யாழ் ரயில் நிலையத்தில் வாரண்டுகளுக்கான பயண டிக்கெட்டுக்கள் மட்டுமே வழங்கப்படும்.

# படையினர் யுத்தமீறல்; இந்தியா எடுத்துச் சொல்லும்

சென்னை, ஜன.16

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இலங்கைப் பாதுகாப்புப் படையினர் யுத்த நிறுத்த மீறல் செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருவது குறித்து இலங்கை அரசாங்கத்திடம் இந்திய அரசு எடுத்துச் சொல்லும்.

ஈழம் தேசிய விடுதலை முன்னணிக்கு இந்திய அரசு இப்படி உறுதியளித்திருக்கிறது.

இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. ரொமேஷ் பண்டாரி கடந்த புதன்கிழமை ஈழம்தேசிய விடுதலை முன்னணியின் பிரமுகர் ஒருவருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். அப்பொழுதே திரு பண்டாரி இப்படி உறுதியளித்தார்.

இந்தப்பிரச்சினைகுறித்து கொழும்பில் உள்ள இந்திய தூதுவர் திரு. ஜே. என். டிக்ஸிற் மூலம் இலங்கை அரசிடம் எடுத்துரைக்கப்படும் என்று தம்மிடம் திரு பண்டாரி உறுதியளித்திருப்பதாகவும் முன்னணிப் பேச்சாளர் தெரிவித்தார்.

யுத்த நிறுத்த உடன்பாட்டை விடுதலை முன்னணி மீறவில்லை என்றும்–

இலங்கை அரசு அந்த உடன்படிக்கையைத் தட்டிக் கழிக்காத வரையில் விடுதலை முன்னணியும் அதனைக் கடைப்பிடிக்கும் என திரு. பண்டாரியிடம் முன்னணி உறுதியளித்திருப்பதாகவும் அப்பிரமுகர் தெரிவித்தார்.



பருத்தித்துறையில் நேற்று நடைபெற்ற சம்பவத்தில் படுகாயமடைந்த வேலாயுதம் மோகன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது எடுக்கப்பட்ட படம்.

## கொழும்பில் குண்டு வெடிப்பு

யாழ்ப்பாணம். ஜன.17

கொழும்பு. பொரளைப் பகுதியில் உள்ள தாஸ வர்த்தக நிலையத்தில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் இரண்டு பேர் காயமடைந்தனர்.

ஒருவர் பொலீஸ் கான்ஸ்டபிள் மற்றவர் டாக்ஸி சாரதி.

காலை 8மணி அளவில் இச்சம்பவம் நடந்தது.

## காயமடைந்தோர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தந்தை.

5. என் யூசுப் ?2வயது. இவரது நெஞ்சை குண்டு துளைத்துள்ளபடியால் உயிருக்காக போராடிக் கொண்டிருக்கிறார்.

6. கணேசரட்ணம் தர்மகுலசிங்கம் 20 வயது. கொக்குவில் வாசி. பிள்ளையார் விலாஸ் கடைக்குள் நின்ற பொழுது அக்கடைக்கு குண்டுவீசப்பட்டதாம். இதனால் இவருக்கு கால், கைகளில் காயம் ஏற்பட்டிருக்கிறது.

7. கிளாசர் செல்வம் 18 வயது. கூலி வேலை செய்து வருபவர் இவரது தோள்மூட்டை குண்டு தாக்கியிருக்கிறது.

8. பண்டா 40வயது இரத்தினபுரியைச் சேர்ந்தவர். இவர் பழைய மார்க்கட் பகுதியில் பிச்சைஎடுப்பவர். நெடுங்காலமாக யாழ்ப்பாணத்தில் வசித்து வரும் சிங்கள சகோதரர் இவருக்கு பின் முதுகில் காயம் ஏற்பட்டுள்ளது

9 எஸ்.சந்தையா 48 வயது. பழைய மார்க்கட்டைச் சேர்ந்தவர்.

10 பிரகாசம் இராசேந்திரன் 32வயது. இவர் வாய் பேசாதவர். வீட்டில் இருந்து பல் துலக்கிக் கொண்டிருந்த இவரைக் குண்டு தாக்கியது. இடுப்பில் சூட்டுக்காயம்.

11. கணபதிப்பிள்ளை கந்தையா புங்குடுதீவைச் சேர்ந்தவர் 48 வயது. இவர் யாழ் லெட்சுமி விலாஸில் வேலை செய்பவர். கடைக்குள் நின்ற பொழுது குண்டு தாக்கியது.

நெஞ்சு, இடுப்பு, கால் ஆகியவற்றில் காயம் ஏற்பட்டுள்ளது.

மூன்று பெண் பிள்ளைகளின் தந்தை.

12. சி தங்கராசா 55 வயது. கூலிவேலை செய்பவர். வீட்டுக்கு மேலால் வந்த குண்டு இவரைத் தாக்கியது இதனால் தலையில் காயம் ஏற்பட்டுள்ளது.

13. எம். ஜெயந்தன் 16 வயது. யாழ்ப்பாணம் பீச் ரோட்டைச் சேர்ந்தவர்.

14. க.நடராசா 40 வயது.

15. பி.குமரேசன் 21 வயது.

16. எஸ். பாலசுப்பிரமணியம் 40வயது சிவன் கோவிலடியைச் சேர்ந்தவர்.

# யாழ்ப்பாண நகரத்தில்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

படும் ஷெல் குண்டுகள் தீர்க்கப்பட்டன.

ரெக்கட்லோஞ்சரில் இருந்தும் குண்டுகள் தீர்க்கப்பட்டன.

அதேவேளை கவசவாகனங்களில் இருந்தும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டது.

கோட்டை பக்கத்தில் இருந்து வந்த ஷெல் குண்டு ஒன்று பஸ் நிலையத்துக்கு அருகில் மின்சார நிலைய வீதி மூன்றாவது ஒழுங்கைக்குள் இருந்த வீடு ஒன்றைத் தாக்கியது. அந்த வீடு உதயன் பணிமனையிலிருந்து சிறிது தொலைவில் உள்ளது.

### முஸ்லிம் வர்த்தகர் இருவர் மரணம்

வீட்டைக் குண்டு தாக்கியபோது, வீட்டினுள் இருந்த இரண்டு முஸ்லிம் வர்த்தகர்கள் அந்த இடத்திலேயே இறந்தனர்.

இறந்த இரண்டு பேரும் நடைபாதை வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்தவர்கள் எனத் தெரிய வருகிறது.

வீட்டினுள் இருந்த மற்றும் இருவர் பலத்த காயம் அடைந்தனர்.

பீதியில் வீட்டில் தஞ்சம் புகுந்தவர்களே காயமடைந்த இரண்டு பேர்களாவர். அந்த ஒழுங்கையில் உள்ள 3 வீடுகள் சேதம் அடைந்தன.

குண்டு தாக்கிய சத்தத்தில் பக்கத்து வீடுகளில் இருந்த சிலர் மூர்ச்சித்தனர்.

### தேநீர் அருந்தியவரும் மரணம்

இதே வேளை காங்கேசன்துறைவீதியில் உள்ள உடுப்பி லொட்ஜில் தேநீர் அருந்திக் கொண்டு இருந்த ஒருவர் துப்பாக்கிச் சூட்டில் மரணமானர்.

லட்சுமி விலாசுக்குள் கடமையிலிருந்த இரண்டு சிற்றூழியர்கள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தார்கள்.

ஆயுதப்படையினர் முட்டாசுக் கடையை அடைந்தபோது போராளிகள் நேருக்கு நேர் தாக்கத் தொடங்கினர்.

### திரும்பிய போதும் தாக்குதல்

ஆயுதபபடையினர் தொடர்ந்து சுட்டனர். எனினும முன்னற முடியவில்லை.

கீழே விழுந்த மூன்று படையினரை சகவீரர்கள் தூக்கி கவசவாகனத்தில் ஏற்றிச் சென்றதாகச் சொல்லப்படுகிறது.

ஆயுதப்படையினர் முகாமுக்குத் திரும்பிச் சென்றபோதும் அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

படையினர் திரும்பிக் கொண்டிருந்த அதே நேரத்தில் கோட்டை முகாமில் இருந்து ஷெல் குண்டுகள் தீர்க்கப்பட்டவண்ணம் இருந்தன.

### விளைவுகள்

கோட்டை முகாமிற்கு முன்னால் இருக்கும் பல வீடுகளையும் ரெக்கட்லோஞ்சரில் இருந்துவந்த குண்டுகள் தாக்கின.

இதனால் அந்த வீடுகள் பலத்த பாதிப்பு அடைந்தன.

ஜும்மா பள்ளிவாசல் ஒழுங்கையில் உள்ள மொகிதீன் பள்ளிவாசல் சுவர்கள் கண்ணாடிகள் மோட்டாரில் இருந்து வந்த ஷெல் குண்டுகள் தாக்கி உடைந்து நொருங்கின. அப்பகுதியில் பல வீடுகளும் சேதமடைந்தன.

காங்கேசன்துறை வீதியில் விழுந்த மோட்டார் ஷெல் குண்டுகளினால் பல கடைகள் சேதமுற்றன. கடைச் சுவர்களைக் கூட குண்டுகள் துளைத்துச் சென்றன.

தெய்வானை நகைமாளிகை முன்பாக விழுந்த ஷெல் குண்டுகளினால் நகை மாளிகையின் கண்ணாடிகள் சுவர்கள் நொருங்கின.

குண்டு விழுந்த இடம் பெரிய குழியாகக் காட்சியளித்தது.

கோட்டையில் இருந்து வந்த துப்பாக்கிக் குண்டுகள் தாக்கி பஸ் நிலையத்தில் இருந்த ஒரு சிலையின் கீழ்ப்பகுதி சேதமடைந்தது.

### மாடுகளும் மாண்டன

5 மாடுகளும குண்டுகளுக்கு இரையாகி உயிரிழந்தன.

சத்திரச் சந்தியில் உள்ள சந்தையில் பல கடைகளையும் துப்பாக்கிக் குண்டுகள் துளைத்தன.

சத்திரச்சந்தி ஞான வைரவர் கோயில் சுவர்களையும் துப்பாக்கி ரவைகள் தாக்கின.

காங்கேசன்துறை வீதியில் உள்ள ஓட்டுக்கடை தண்ணீர்த் தாங்கியும் பலத்த சேதம் அடைந்தது.

இச்சம்பவங்களைத் தொடர்ந்து யாழ்நகரம் நேற்று வெறிச்சோடியது. வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்தன. பாடசாலைகளுக்கு மாணவர் செல்லவில்லை. அரச அலுவலகங்களுக்கும் ஊழியர் அவ்வளவாகச் செல்லவில்லை.

பஸ்சேவைகள் முதலில் தடைப்பட்டிருந்தன. காலையில் நகரை நோக்கி வந்த பஸ்கள் கேந்திர சந்திகளில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டன.

யாழ் பிரதம தபால் நிலையம், வீரசிங்கம் மண்டபம், வைத்தீஸ்வரா வித்தியாலயம் சந்தியிலுள்ள கடைகள் இச்சம்பவத்தின் போது சேதமடைந்தன.

அச்சக உரிமையாளர்களுக்கும்,
வர்த்தகர்களுக்கும்
ஒரு நற்செய்தி
எல்லா வகையான
காகிதாதிகளும் அப்பியாசக்
கொப்பிகளும்
விசேட கழிவுடன்
விற்பனைக்குண்டு.
உடன் தொடர்புகொள்ளுங்கள்
GLOBE INDUSTRIES
173, 4th Cross Street,
JAFFNA.
APPROVED DEALERS FOR
National Paper Corporation
Telephone : 23187

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: நியூ உதயன் எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட். 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 1 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். வெளியீட்ட திகதி 17-01-1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org